<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

**முன்னிலை: திருமதி. D. ஜான்சிராணி MBA, LLM.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ.),

ஆத்தூர்.

2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 10–ஆம் நாள், வியாழன்கிழமை

<u>I.A. No. 5 of 2024 in OS. No. 67/2012</u>

<u>(CNR No. TNSA13-000239-2012)</u>

மூர்த்தி .. மனுதாரர் /பிரதிவாதி

–எதிராக–

ராஜேந்திரன் .. எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 10.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்திற்கு முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R. ராஜேந்திர மகாஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலினையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்/பிரதிவாதி தனது மனுவில் PW1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி தாவாவில் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கானது மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் PW1 / வாதியை குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கடந்த 05.11.2024 தேதியன்று வழக்கின் வாய்தா தேதி போடப்பட்டிருந்தது என்றும், ஆனால் 03.11.2024 தேதியன்று தனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் தனது வழக்கறிஞரை சந்தித்து அவரிடம் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கான தகவல்களை சொல்ல இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாலும், எதிர்மனுதாரர் / வாதியை குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டதாகவும். எனவே மேற்படி வழக்கிற்கு மிகவும் முக்கியமான விடுபட்டுள்ள சங்கதிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி PW1 சாட்சியத்தை மீண்டும் அழைக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்/ வாதி ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். மேற்படி தாவா குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக கடந்த 05.11.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு கடந்த 03.11.2024 அன்று உடல்நிலை சரியில்லாமல் போனது பொய் என்றும், கடந்த 05.11.2024 அன்று வாய்தா தேதியில் மனுதாரர் திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளாதாக எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் எதிருரையில் சொல்லியுள்ளார்கள். மேற்படி வழக்கில் பிரதிவாதிக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. இந்த வழக்கானது கடந்த 2012–ல் தாக்கல் செய்யப்பட்டு தற்பொழுது வா.த.சா. 1 –ன் குறுக்கு விசாரணைக்காக நிலுலையில் இருந்து வருகிறது. ஆவணங்கள் பரிசீலினை செய்கையில், வா.த.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்படாமல் கடந்த 05.11.2024–ல் PW1 குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது PW1 Recall செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் உள்ளதால் நீதியின் நலன்கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

7. இறுதியாக மனுதாரர் ரூ.1000/–ம் செலவுத்தொகையாக எதிர்மனுதாரர் அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுதரவுரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ம் ஆண்டு, ஜுலை திங்கள், 10–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/– D. ஜான்சிராணி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆத்தூர்.

| | | |
|---|---|---|
| மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் | : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் | : | இல்லை |

| | | |
|---|---|---|
| நீதிமன்ற சாட்சிகள் | : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் | : | இல்லை |

(ஒப்பம்/– D. ஜான்சிராணி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆத்தூர்.

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்**

**கூ.மா.உ.நீ.. ஆத்தூர்.**

**இ.ம.வ. எண். 5/2024**

**--------------------------**

**அ.வ.எண். 67/2012**

அசல்/ வரைவு உத்தரவுரை

நாள். 10.07.2025